Asian Journal of Innovative Research 1(3) 58-59 (2016)

ISSN 2455 7285

ASIAN JOURNAL OF INNOVATIVE RESEARCH
Available online at http://www.asianjir.com

ஆராய்ச்சி கட்டுரை

தமிழ்

*15 ஆகஸ்ட் 2016 இல் பெறப்பட்டது; ஏற்றுக்கொள்ளப்பட்டது 25 செப் 2016 ஆன்லைன் செப் 2016*

# வர்ம விளக்கங்கள்

**க. சித்ரா**

***முனைவர் க. சித்ரா***
கௌரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை
பாரதிதாசன்
பல்கலைக்கழக உறுப்பு
பெண்கள் கல்லூரி
ஒரத்தநாடு – 614 625

**சுருக்கம்**

மனிதனுக்கு ஏற்படுகின்ற பல்வேறு நோய்களைக் குணமாக்குவதற்கு மருந்துகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மருந்துகள் நோயுற்ற அனைவருக்கும் பயன்படுவதில்லை. பல மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் வர்மக்கலை என்பது மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கின்றது. அந்த வகையில் வர்மங்களின் வகைகள் அவற்றின் தன்மைகள் மற்றும் நிலைபாடுகள், வர்மங்களை விளக்கிக் கூறும் பல்வேறு வர்ம நூல்கள் பற்றி அறியமுடிந்தது.

***முக்கிய வார்த்தைகள்:*** வர்ம நூல்கள், வர்ம விளக்கங்கள்

***Citation:*** க. சித்ரா (2016) வர்ம விளக்கங்கள். Asian Journal of Innovative Research 1(3) 58-59.

## முன்னுரை

உடலின் குறிப்பிட்ட சில நரம்புகளில் குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட அளவில் தட்டுப்பட்டால் ஒருவர் உணர்விழப்பர். அந்தக் குறிப்பிட்ட இடங்கள் வர்மம்மாகும். உடல் சீராக இயங்குவதற்காக உடலின் 108 இடங்களில் நின்று இயங்கும் உயிர்நிலைகள் வர்மங்கள் என அறியலாம்.

## வர்ம வகைகள்

படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம், நோக்கு வர்மம் என வர்மத்தை பொதுவாகக் கூறுவதுண்டு. அவை படுவர்மம் 12 என்றும், தொடுவர்மம் 96 என்றும் மொத்தம் 108 வர்மத்தைக் குறிப்பிடுகிறார்கள். வர்மக்கலை நூலாசிரியர்கள் படுவர்மம் பெயரளவில் பன்னிரண்டு என்பதில் உடன்படுகிறார்கள். ஆனால் வர்மத்தின் பெயர்கள் நூலுக்கு நூல் வேறுபட்டு காணப்படுகின்றன.

> **“எட்டான கலையுடனே பிராணம் நாலு ஏகினால்**
> **ஈராறு கலையா மென்ன**
> **கட்டான ஈராறும் வழியெட்டாக கருதினதால்**
> **தொடுவர்மம் தொண்ணூற்றாறு**
> **நெட்டுறவே இதுகளெல்லாம் நூற்றெட்டாகி நிறைந்ததினால்**
> **நூற்றெட்டு வர்மமாச்சு”**

என்று வர்ம வகைகளை பற்றி வர்மப் பாடல் மூலம் அறியலாம்.

**படுவர்மம்**

ஒருவருக்குப் படுவர்மத்தில் பலமாக அடிப்பட்டால் உடனே அவர் மயக்கமடைந்து கீழே விழுந்து விடுவார். அதிக அளவு ஆபத்தை உண்டாக்குவதால் இவ்வர்மம் படுவர்மம் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

**"பாரப்பா படுவர்மம் பன்னிரெண்டும்**
**பாலகனே இதன் பேரைச் சொல்லக் கேளாய்**
**நேரப்பா திலர்த மது கொழுந்து கீழும்**
**நிர்ணயமாய் நுனியுடனே வாடைநாடி**
**ஆரப்பா சங்குடனே வாய் அருந்திரன் அரி**
**பிரம்மா வருணனது லிங்கவர்மம்**
**சாரப்பா சாத்தியம் அசாத்தியம் கேளு தெளிவாக**
**சொல்லுகிறேன் தயவாயாய் பாரே"**

மனித உடலில் உள்ள படுவர்மங்கள் கூறப்படுகின்றன. திலர்த்த வர்மம், கொழுந்து வர்மம், நுனிவர்மம், வாடைவர்மம், நாடிவர்மம், சங்குவர்மம், வாய்வு வர்மம், உருத்தரவர்மம், அரிவர்மம், வருண வர்மம், லிங்க வர்மம் என்பனவாகும்.

**தொடுவர்மம்**

தொடுவர்மம் மூலம் ஏற்படும் வர்மம் இதுவாகும். இது படுவர்மம் போன்று பலமாகத் தட்டாமல் சில இடங்களில் பலமாகவும், சில இடங்களில் மென்மையாகவும் விரல்களால் அழுத்துவதால் ஏற்படுகின்றது. இதில் அடிப்பட்டால் மரணப்பயம் இல்லை. இதன் பாதிப்பு நாள்பட நாள்பட அதிகரிக்கும். கை, கால் செயலிழந்து போகவும் வாய்ப்பு இருக்கும் என உணரலாம்.

**திலர்த்தக் காலம்**

திலர்த்தக் கால வர்மம் நெற்றியின் நடுப்பகுதிக்குச் சற்றுக் கீழ் காணப்படுகிறது. இந்த பகுதி எள் அளவு உள்ள இடம். எள்ளிற்கு 'திலம்' என்ற பெயர் உண்டு. எள்ளளவுள்ள இடம் என்பதால் 'திலர்த்த வர்மம்' என கூறப்பட்டுள்ளன. இந்த வர்மத்தில் அடிப்படும் நபர்களுக்கு கண்களின் பார்வையில் மறைவு, மயக்கம், தலைக்குள் வலி போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளது. பின் அவர் மயக்கம் அடைந்து கீழே விழுந்து விடுவார். ஒன்றரை மணி நேரத்தில் இளக்குமுறை செய்து, எழுப்பாமல் விட்டால் இறந்து போய்விடுவார். அவருடைய காதுகளின் தலை பக்கத்தில் அமைந்துள்ள வர்மப் பகுதியில் இரு விரலை வைத்து நீவி விட்டால் அவருடைய வாய் மூடிக் கொள்ளும். பின் வாயில் சுக்குத்துண்டைப் போட்டு மென்று அவருடைய காதிலும், மூக்குத் துவாரங்களிலும் ஊத அடிப்பட்டவர் குணப்படுத்த முடியும் என்பதை அறியலாம்.

**செவிக்குத்திக் காலம்**

இந்த வர்மம் காதிற்குப் பக்கத்தில் தண்டுப் பகுதியில் அமைந்திருக்கிறது. இவ்வர்மப் பகுதியில் அடிப்பட்டால் கண் விழிகள் வெளித்தள்ளி, வாயில் நுரை தள்ளும். இவ்வர்மத்தை சுமார் ஒன்பது மணி நேரத்திற்குள் இளக்கிவிட வேண்டும். முதுகு, நெஞ்சுப் பகுதி களையும் தடவி பின் அவரை அமர வைத்து அடிப்பட்டவருடைய உச்சி முடியை கொத்தாக பிடித்துக் இழுக்க வேண்டும். கஞ்சி, சுக்குக் கசாயம் கொடுத்தால் மயக்கம் நீங்கும்.

**சங்கு வர்மம்**

இவ்வர்மம் குரல்வளைக்கு இரண்டு பக்கத்திலும் அமைந்திருக்கிறது. இதில் அடிப்பட்டால் குரல்வளையின் நரம்புகள் பாதிக்கப்பட்டு அடிப்பட்டவருக்கு உடனே மயக்கம் வரும். நோயாளியின் காதுப் பகுதியில் கட்டை விரலை வைத்து மெதுவாக நீவி விட்டு, சுக்குத் துண்டைப் போட்டுக் கஞ்சி வைத்து தினமும் மூன்று வேளை வீதம் மூன்று நாட்களுக்குத் தவறாமல் கொடுத்து வந்தால் நோய் குணம் அடைகின்றன.

**வர்ம நூல்கள்**

வர்ம பீரங்கி, வர்ம திறவுகோல், வர்ம கண்ணாடி, வர்ம ஆணிநூல், வர்ம சூத்திரம், படுவர்மத்திரட்டு, தொடுவர்ம சூட்சம் போன்றவை வர்மம் சார்ந்த நூல்கள் என அறியலாம்.

வர்மம் எந்த இடத்தில் ஏற்பட்டுள்ளது என்பதைப் பார்த்து அதன் வெளிப்பாடு எதுவென்று தெரிந்து, அதன் நாழிகை அறிந்து மனிதனின் உடல்நிலைக்கு ஏற்றவாறு வர்மம் கொண்ட ஒரு மனிதனைக் காப்பாற்ற முடியும் என்பதை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

**ஆதாரமாக பயன்படுத்துவது**


1. நே.ஜோசர், வர்மம் ஓர் வாழ்வியல்
2. எஸ்.சிதம்பரதாணுபிள்ளை, படுவர்மத்திரட்டு
3. எஸ்.எம்.அலெக்சாண்டர் ஆசான், வர்மக்கலை களஞ்சியம்
4. வை.முத்துக்கிருஷ்ணன், வர்மக்கலையைக் கற்றுக் கொள்ளுங்கள்
5. அ.மரிய சோசப், சித்தமருத்துவம் தொகுதி-3